




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"








Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 279 | 02.04.2026 | THURSDAY | PANGUNI: 19 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 279 | 02.04.2026 | வியாழக்கிழமை | பங்குனி : 19 | விலை : ரூ.5/-


## ராகுல் காந்திக்கு

# "தோல்விகளின் சதம் காத்திருக்கிறது!"

## அசாமில் பிரதமர் மோடி பேச்சு

கோகாமுக்: ஏப்.2-

அசாமில் 3வது முறையாக தேசிய ஜனநாயக் கூட்டணி ஆட்சி அமையும் என்று நம்பிக்கை தெரிவித்த பிரதமர் நரேந்திர மோடி, காங்கிரஸ் கட்சியின் சுய பிரகடன இளவரசருக்கு தோல்விகளின் சதம் காத்திருக்கிறது என்று விமர்சித்தார்.

அசாம் சட்டப்பேரவைத் தேர்தலை ஒட்டி கோகாமுக் பகுதியில் நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, ''முதலில் சர்பானந்த சோனாவால் தலைமையிலும் பின்னர் ஹிமந்த பிஸ்வா சர்மா தலைமையிலும் அசாமில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்த 10 ஆண்டுகால ஆட்சியில், அசாம் ஒரு புதிய சேவை மற்றும் நல்லாட்சிக்கான சகாப்தத்தைக் கண்டுள்ளது. வளர்ந்த இந்தியாவை கட்டமைக்க வளர்ந்த அசாமை உருவாக்குவதற்கான தேர்தல் இது. இம்முறையும் தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெற்று மூன்றாவது முறையாக ஆட்சி அமைக்கும் என்பது உறுதி. அதேபோல், காங்கிரஸ் கட்சிக்கும் மூன்றாவது முறையாக தோல்வி கிடைப்பது உறுதி. காங்கிரஸ் கட்சியின் சுய பிரகடன இளவரசருக்கு 100 வது தோல்வி காத்திருப்பதும் உறுதியாகிவிட்டது.



அசாம் தேர்தல் அறிவிப்பு வெளியான பிறகு இதுவே எனது முதல் பொதுக்கூட்டம். இங்கு திரண்டுள்ள மக்கள் கடலே, நாங்கள் மூன்றாவது முறையாக வெற்றி பெற இருக்கிறோம் என்பதற்கான சான்று. உங்கள் ஆசியுடன் நான் மூன்றாவது முறையாக பிரதமரானேன். இந்த திடலுக்கு நான் வருகை தருவது இது மூன்றாவது முறை. உங்கள் ஆசியுடன் அசாமில் நாங்கள் மூன்றாவது முறை வெற்றி பெறுவோம்.

பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ஏற்கனவே 22 லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் உறுதியான வீடுகளை பெற்றுள்ளன. இந்த திட்டத்தின் கீழ் வீடு கிடைக்காத குடும்பங்களுக்கு கண்டிப்பாக வீடு கட்டித்தரப்படும். பாஜக தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள வாக்குறுதிகளின்படி, இத்திட்டத்தின் கீழ் 15 லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடையும். ஏழை குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு மழலையர் வகுப்பு முதல் பட்ட மேற்படிப்பு வரை இலவச கல்வி வழங்கப்படும்.

பெண் லட்சாதிபதிகள் திட்டத்தின் கீழ் அசாமில் ஏற்கனவே சுமார் 3 லட்சம் பெண்கள் லட்சாதிபதிகளாகி உள்ளனர். அடுத்த 5 ஆண்டுகளில் 40 லட்சம் பெண்களை லட்சாதிபதிகளாக ஆக்க நாங்கள் இலக்கு நிர்ணயித்துள்ளோம்'' என தெரிவித்தார்.

முன்னதாக, அசாமின் திப்ருகரில் அமைந்துள்ள ஒரு தேயிலை தோட்டத்துக்கு பிரதமர் மோடி சென்றார். அங்கு அவர் தேயிலைத் தோட்ட தொழிலாளர்களுடன் கலந்துரையாடிய அவர், மாநிலத்தின் தேயிலைத் துறைக்கு அவர்கள் ஆற்றி வரும் பங்களிப்புக்கு பாராட்டு தெரிவித்தார்.

அசாமில் மொத்தமுள்ள 126 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக ஏப்ரல் 9ம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. வாக்கு எண்ணிக்கை மே 4ம் தேதி நடைபெற உள்ளது. அசாமில், பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அசாம் கனபரிஷத், போடோலாந்து மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் இடம்பெற்றுள்ளன. மூன்றாவது முறையாக வெற்றி பெற தேசிய ஜனநாயகக் கூட்டணி தீவிரம் காட்டி வரும் அதேநேரத்தில், மீண்டும் ஆட்சியைக் கைப்பற்ற காங்கிரஸ் கட்சியும் தீவிரம் காட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

## 'மக்கள் சாப்பாடு' திட்டம் முதல் பெண்ணின் திருமண வயது 21 வரை

### பாமக தேர்தல் அறிக்கை முக்கிய அம்சங்கள்

சென்னை: ஏப்.2-

பூரண மதுவிலக்கு, வேலையில்லா பட்டதாரிகளுக்கு ரூ.5 ஆயிரம் உதவித் தொகை, ரூ.10க்கு சாப்பாடு வழங்கும் திட்டம் உள்ளிட்ட வாக்குறுதிகள் பாமகவின் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளது.



2026 தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் அக்கட்சியின் தேர்தல் அறிக்கையை வெளியிட்டார்.

பாமக தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள முக்கிய அம்சங்கள்:

- பூரண மதுவிலக்கு அமல்படுத்தப்படும்.
- பெண்களின் திருமண வயது 21 ஆக உயர்த்தப்படும்.
- கல்விக்கடன் ரத்து செய்யப்படும்.
- சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும்.
- தமிழ்நாட்டில் 5 லட்சம் பேருக்கு அரசு வேலை வழங்கப்படும்.
- அரசு மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் 1 கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.
- வேலைவாய்ப்பு இல்லாதா பட்டதாரிகளுக்கு மாதந்தோறும் ரூ.5,000 வழங்கப்படும்.
- கரும்புக்கு டன்னுக்கு ரூ.5,000 கொள்முதல் விலை நிர்ணயம் செய்யப்படும்.
- பயிர்க் கடன் தள்ளுபடி செய்யப்படும்.
- ரேஷன் கடைகளில் குடும்ப அட்டைக்கு 2கிலோ நாட்டு சர்க்கரை வழங்கப்படும்.
- தனியார் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கான கல்வி கட்டணத்தை அரசு ஏற்கும்.
- தமிழ்நாட்டின் 2வது தலைநகரமாக திருச்சியை மாற்றுவோம்.
- குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.2,000 வழங்கப்படும்.
- ஞாயிற்றுக்கிழமையில் ரூ.25க்கு அசைவ சாப்பாடு வழங்கப்படும்.
- ரூ.10க்கு 'மக்கள் சாப்பாட்டு' திட்டம் தொடங்கப்படும்.
- நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும், உள்ளிட்ட முக்கிய அம்சங்கள் பாமக தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாட்டாளி மக்கள் கட்சிக்கு 18 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. வேட்பாளர்கள் பட்டியல் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட நிலையில், இன்று தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

## அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சாய்தள வசதி ஏற்படுத்த நடவடிக்கை

### தமிழக தேர்தல் ஆணையம் விளக்கம்

சென்னை, ஏப்.2-

தமிழகத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும், மாற்றுத் திறனாளிகள் வாக்களிக்க, சாய்தள வசதிகள் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக, தேர்தல் ஆணையம் சென்னை உயர் நீதிமன்றத்தில் விளக்கம் அளித்துள்ளது.



மாற்றுத் திறனாளிகள் எளிதில் அணுகும் வகையில் வாக்குச் சாவடிகளில் உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கக் கோரி, மாற்றுத் திறனாளியான வைஷ்ணவி ஜெயகுமார் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்த போது, தேர்தல் ஆணையம் தரப்பில், மாற்றுத் திறனாளிகள் சட்ட விதிகளை அமல்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி, அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுறுத்தல்கள் அனுப்பப்பட்டுள்ளன. அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சாய்தள வசதிகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக, முழுமையான விவரங்களுடன் மனுவாக தாக்கல் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டது.

மேலும் மனுதாரர் தரப்பில், வாக்குச்சாவடிகளில் நிரந்தர சாய்தள வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

அதனை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், மாற்றுத் திறனாளிகள், வாக்குச்சாவடிகளை எளிதில் அணுகும் வகையில் அமைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்களை மனுவாக தாக்கல் செய்ய தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டு விசாரணையை அடுத்த வாரத்துக்கு தள்ளிவைத்து உத்தரவிட்டனர்.


விளம்பரம் மற்றும் செய்திகள்

தொடர்புக்கு : 88705 00000


## மதிமுக 4 வேட்பாளர்களும் உதய சூரியன் சின்னத்திலேயே போட்டி: வைகோ

சென்னை: ஏப்.2-

சீர்காழி தொகுதி மதிமுக வேட்பாளரும் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடுவார் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் வைகோ அறிவித்துள்ளார். முன்னர், ஒரு தொகுதியில் மட்டும் தனிச் சின்னத்தில் போட்டியிடுவோம் என்று வைகோ கூறியிருந்த நிலையில் இந்த முடிவை அவர் இன்று அறிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "2026, ஏப்ரலில் நடைபெற இருக்கும் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம்பெற்றுள்ள மறுமலர்ச்சி தி.மு.கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளில் ஒன்றான சீர்காழி (தனி) தொகுதியிலும் கழக வேட்பாளர் வழக்கறிஞர் இரா. செந்தில்செல்வன் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகிறார் என்பதை தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன் மூலம் மதிமுக தனக்கு ஒதுக்கப்பட்ட 4 தொகுதிகளிலுமே உதய சூரியன் சின்னத்திலேயே போட்டியிடுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், இத்துடன் மொத்தம் 176 தொகுதிகளில் உதய சூரியன் சின்னம் களம் காண்கிறது என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் உள்ள மதிமுகவுக்கு மொடக்குறிச்சி, மதுரை தெற்கு, கடையநல்லூர், சீர்காழி (தனி) ஆகிய 4 தொகுதிகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

திமுக கூட்டணியில் காங்கிரஸுக்கு 28, தேமுதிகவுக்கு 10, விசிகவுக்கு 8, கம்யூனிஸ்ட்கள் தலா 5, கொமதேக2, மதிமுக 4, இந்திய யூனியன் முஸ்லீம் லீக், மமகவுக்கு தலா 2 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதில் எஸ்டிபிஐ உட்பட சில சிறிய கட்சிகள் திமுகவின் உதய சூரியன் சின்னத்தில் தலா ஒரு தொகுதியில் களமிறக்கப்பட உள்ளன.

## "மதுரை மத்திய தொகுதியில் இரட்டை இலை உதய சூரியன் இடையேதான் போட்டி" : சுந்தர்.சி

சென்னை: ஏப்.2-

"மதுரை மத்திய தொகுதியை பொருத்தவரை இரட்டை இலைக்கும் உதய சூரியனுக்கும் இடையே தான் போட்டி" என நடிகர் சுந்தர்.சி தெரிவித்துள்ளார்.

மதுரை மத்திய தொகுதியில் அதிமுக கூட்டணியில் புதிய நீதிக்கட்சி சார்பில் திரைப்பட இயக்குநரும், நடிகருமான சுந்தர்.சி இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடுகிறார். இந்நிலையில், அவர் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசும்போது,



"மதுரை மத்திய தொகுதி மக்கள் நிச்சயம் எனக்கு வெற்றிக் கனியை தருவார்கள் என நம்பிக்கை இருக்கிறது. இனிமேல் மாதத்தில் 15 நாட்கள் எனது வாழ்க்கை மதுரையில்தான் இருக்கும் என்பதை உறுதிப்பட சொல்கிறேன்.

திரைப்படத்துறையில் கடந்த 30 ஆண்டுகளாக நிறைய சாதனையை படைத்திருக்கிறேன். எனது அடுத்த கட்ட நகர்வு என்பது தேர்தல் முடிவுகளை வைத்து முடிவு செய்யப்படும். நடிகர் விஜய் என் மீது மதிப்பும் மரியாதையும் கொண்டவர். அதேபோல நானும் அவர் மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறேன்.

எனது மனைவி குஷ்பு, அவரை தம்பியாக தான் கருதுகிறார். அவரும் குஷ்புவை அக்காவாக தான் பார்க்கிறார். அதனால் எந்த வகையிலும் அவரைப் பற்றி, அவரது கட்சியைப் பற்றி பேசவோ, விமர்சிக்கவோ நான் தயாராக இல்லை. ஆனால் மதுரை மத்திய தொகுதியை பொருத்தவரை இரட்டை இலைக்கும் உதய சூரியனுக்கும் இடையே தான் போட்டி" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய குடும்பம்!" - உடன்குடி சாஸ்தா கோவில் பயணத்தில் நேர்ந்த பரபரப்பு



திருநெல்வேலி, ஏப்.2-

திருநெல்வேலி மாவட்டம் கூடங்குளத்தை சேர்ந்த ராஜ் மகன் பாலன், தனது குடும்பத்துடன் உடன்குடி சாஸ்தா கோவிலுக்கு சென்று கொண்டிருந்தார் நவலடி அருகே சென்றுகொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக அவர்கள் பயணித்த கார் திடீரென தீப்பற்றியது.

இதை கவனித்த பாலன் மற்றும் குடும்பத்தினர் உடனடியாக வாகனத்தை நிறுத்தி, உள்ளிருந்த அனைவரையும் விரைவாக கீழிறக்கி பாதுகாப்பாக மீட்டனர். இதனால் பெரிய விபத்து தவிர்க்கப்பட்டது. சம்பவம் குறித்து தகவல் கிடைத்ததும் தீயணைப்பு துறையினர் விரைந்து சம்பவ இடத்திற்கு வந்து, தீயை கட்டுப்படுத்தி அணைத்தனர். முதற்கட்ட விசாரணையில், வாகனத்தில் ஏற்பட்ட மின்சார கோளாறு காரணமாக தீப்பற்றியிருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பை ஏற்படுத்தியது.



■ புதுவை மாநிலத்தில் வாக்குப்பதிவு நடைபெறும் தினத்தன்று சட்டமன்ற தேர்தல் பணியில் ஈடுபடும் போலீசார் அதிகாரிகள் மற்றும் போலீசார் தபால் வாக்களிக்க ஏதுவாக இரண்டு இடங்களில் வாக்களிக்க ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. நகர்ப்புறங்களில் உள்ள காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்கள் கோரிமேடு போலீஸ் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள சமுதாய நலக் கூடத்திலும், கிராமப்புற பகுதியைச் சேர்ந்த காவலர்கள் வில்லியனூர் விவேகானந்தா அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலும் வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன் மூலம் இன்று ஏராளமான காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்கள் தங்கள் தபால் வாக்கினை பதிவு செய்து கொண்டு வருகிறார்கள். தபால் வாக்கு அளிக்கும் மையங்களுக்கு நேரில் சென்று இன்நிகழ்வினை மாவட்ட தேர்தல் அதிகாரி குலோத்துங்கன் நேரில் பார்வையிட்டார்கள்.



■ தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் வட்டம் நடுகுறிச்சி கிராமத்தில் ஸ்டேட் இந்து முன்னணி டிரஸ்ட் சார்பில் பூணூல் சாஸ்தா திருக்கோவிலில் பங்குனி உத்திரத்தை முன்னிட்டு, மாபெரும் 504 திருவிளக்கு பூஜை நடைபெற்றது. நிகழ்விற்கு பூவுடையார்புரம் ஊர் தலைவரும் கோவில் தர்மகர்த்தாவுமான ஆதி லிங்கராஜ் தலைமை தாங்கினார். இந்து முன்னணி மாநில நிர்வாக குழு உறுப்பினர் சக்திவேலன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்பித்தார். பூஜையில் கலந்து கொண்ட அனைவருக்கும் சேலை உட்பட பரிசு பொருள்கள் வழங்கப்பட்டது.



# "வெற்றி இலக்கை நோக்கி !" கூட்டணிக் கட்சி நிர்வாகிகளுடன் எழுச்சியான அலுவலகத் திறப்பு விழா

உடுமலை ஏப்.2-

திருப்பூர் மாவட்டம், உடுமலை சட்டமன்றத் தொகுதிக்கான அதிமுக தேர்தல் அலுவலகம் புறநகர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும், உடுமலை சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளருமான உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் அதிமுக மற்றும் கூட்டணிக் கட்சியினர் திரளாகக் கலந்துகொண்டனர். பாஜக: மோகனப்பிரியா சரவணன் (மாவட்டத் தலைவர்), பாலகுரு (நகர மண்டலத் தலைவர்), கண்ணாயிரம் (மாவட்டப் பொறுப்பாளர்), அதிமுக நகர நிர்வாகிகள்: ஹக்கீம் (நகரச் செயலாளர்), சாமி (எ) சிவராஜ் (நகர அவைத்தலைவர்) ஒன்றிய - மாவட்ட நிர்வாகிகள்: பெரிய கோட்டை முருகேஷ் (ஒன்றியச் செயலாளர்), அன்பர்ராஜன், பிரனேஷ், வக்கீல் மனோகர், அம்மாபட்டி துரைசாமி, வடுகநாதன், சாஸ்திரி சீனிவாசன் (மாவட்ட இணைச் செயலாளர்), சார்பு அணிப் பொறுப்பாளர்கள்: துபாய் ஆறுமுகம், உதயகுமார், எஸ்.எம். நாகராஜ், விருகல்பட்டி பிரகாஷ் ருத்ரேஸ்வரன். கூடுதல் பங்கேற்பாளர்கள்: பொள்ளாச்சி தெற்கு ஒன்றியப் பொறுப்பாளர்கள், மகளிரணி, இளைஞரணி மற்றும் கூட்டணிக் கட்சிப் பொறுப்பாளர்கள், அனைத்துக் கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்று வாழ்த்து தெரிவித்தனர்.

# "வைகை நீரால் தீரும் ஆத்தூரின் தாகம்!" - பிள்ளையார்நத்தத்தில் தேர்தல் களத்தைத் தொடங்கிய அமைச்சர் ஐ.பெரியசாமி



ஆத்தூர்.ஏப்.2-

ஆத்தூர் தொகுதிக்கு வைகைத் தண்ணீர் விரைவில் கிடைக்கும் என்று பிள்ளையார்நத்தத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதோடு, ஆத்தூர் தொகுதிக்கு கேட்டவுன் அரசுக் கலைக் கல்லூரிகள் இரண்டு, டைடல்பார்க், தொழிலாளர் நல மருத்துவமனை வழங்கியவர் திராவிட மாடல் ஆட்சி நாயகர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் என்று அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக பொதுமக்கள் மத்தியில் பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் தொடர்ந்து 9 முறை திமுக சார்பில் போட்டியிடும். வெற்றி வேட்பாளர் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் தனது தேர்தல் பிரச்சாரத்தை பிள்ளையார்நத்தம் ஊராட்சியிலிருந்து தொடங்கினார். நான் வத்தலக்குண்டு ஒன்றிய சேர்மேனாக இருந்தபோது தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்தபோது நீங்கள் சட்டமன்ற உறுப்பினர் தேர்தலில் போட்டியிடுங்கள் என்று பிள்ளையார்சுழி போட்டது இந்த கிராமம். அதனால்தான் நான் ஒவ்வொரு முறையும் தேர்தல் பிரச்சாரத்தை பிள்ளையார்நத்த்திலிருந்து தொடங்குகிறேன். 2026 சட்டமன்ற தேர்தலில் திமுகவின் தேர்தல் அறி;க்கைதான் கதாநாயகன் கதாநாயகியாக உள்ளது.

மகளிருக்கு வழங்கப்படும் என அறிவித்த ரூ. 8 ஆயிரத்திற்கான கூப்பன்தான் பெண்கள் மத்தியில் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது தவிர மகளிர் உரிதை; தொகை ரூ. 2 ஆயிரம் உட்பட எண்ணற்ற நலத்திட்டங்கள் மீண்டும் தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு செயல்படுத்தப்படும் என்றார். பிள்ளையார்நத்தம் ஊராட்சிக்கு காமராஜர் நீர்த்தேக்கத்திலிருந்து குடி தண்ணீர் கொண்டுவந்து, குடி நீர் பிரச்சனையை தீர்த்துவைத்தது திமுக அரசு என்றார். தமிழக அரசு செயல்படுத்தும் அனைத்து நலத்திட்டங்களும் பெண்களின் முன்னேற்றத்திற்கான நலத்திட்டங்களாக இருப்பதால், இன்று பெண்கள் சொந்தக் காலில் நின்று குடும்பத்தை காப்பாற்றக்கூடிய அளவிற்கு முன்னேறி உள்ளனர். மீண்டும் தமிழக முதல்வராக 2வது முறை கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதவியேற்ற பின்பு 100 நாள் வேலைத் திட்டம் தங்குதடையின்றி செயல்படுத்தப்படும் என்றார்.

பிரச்சாரத்தின்போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்ட துணை செயலாளர் மார்கிரேட் மேரி, பொருளாளர் சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் நடராஜன், ஒன்றிய செயலாளர் முருகேசன், விடுதலை சிறுத்தைகள் கட்சி தண்டபாணி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ராஜாமணி, காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் தண்டபாணி, மற்றும் தேமுதிக ஒன்றிய செயலாளர் முத்து, முன்னால் ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், முன்னாள் மாவட்ட செயலாளர் பத்மாவதி ராஜகணேஷ், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கோமதி செல்வகுமார், பிள்ளையார்நத்தம் உலகநாதன், கருப்பையா, ஆறுமுகம், சிவக்குமார், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் செல்வி காங்கேயன், காணிக்கைசாமி, சுமதி கணேசன், நாகலெட்சுமி ரமேஷ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ராஜகணேஷ், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், மில்மேடு கிளைச் செயலாளர் அருண்பாண்டியன், பிள்ளையார்நத்தம் கிளைச் செயலாளர் கண்ணன் உட்பட திமுகவினர் பலர் கலந்து கொண்டனர்.




# "சோனா கல்லூரியின் 9வது ஆண்டு விழா!" - ₹15 லட்சம் மதிப்பிலான கல்வி உதவித்தொகை வழங்கிப் பாராட்டு

சேலம், ஏப்.2-

சேலம் சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 9வது ஆண்டு விழா, கல்லூரியின் ஸ்ரீ வள்ளியப்பா கலையரங்கில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கல்லூரியின் தலைவர் ஸ்ரீ வள்ளியப்பா விழாவைத் தொடங்கி வைத்தார். முன்னிலை: துணைத் தலைவர்கள் சொக்கு வள்ளியப்பா, தியாகு வள்ளியப்பா, கல்லூரி முதல்வர் முனைவர் கு.மை. காதர் நவாஸ் மாணவர்களின் கல்வி மற்றும் ஆராய்ச்சி சாதனைகளைச் சமர்ப்பித்தார். சிறப்பு விருந்தினர் கே. ஆர். சேகர் சிறப்புரையாற்றினார்.

*நிதியுதவி மற்றும் விருதுகள்:* கல்லூரி நிர்வாகம் சார்பில் சுமார் ₹15,00,000 மதிப்பிலான உதவித்தொகைகள் வழங்கப்பட்டன. கல்வியில் முதலிடம் பெற்றவர்களுக்கு ₹4,35,000, விளையாட்டு வீரர்களுக்கு ₹2,12,000, பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு ₹4,35,000, பல்கலைக்கழகத் தரம் பெற்ற துறைகளுக்கு ₹3,00,000, மாற்றுத்திறனாளிகள், NSS, NCC, சிறந்த பேச்சாளர்கள் மற்றும் மருத்துவ உதவிக்காக நிதியுதவி வழங்கப்பட்டது.*நூல் வெளியீடு:* தமிழ்த்துறை சார்பில் எழுதப்பட்ட 'பக்தியும் தமிழும் (சைவம்)' என்ற ஆய்வு நூலைத் தலைவர் வெளியிட, தமிழ்த்துறை தலைவர் முனைவர் க. விஜயராகவன் பெற்றுக்கொண்டார்.கல்வி நிறுவன முதல்வர்கள்: முனைவர் ஏ. கனகராஜ், முனைவர் எஸ்.ஆர்.ஆர். செந்தில்குமார், திருமதி இ.ஜெ. கவிதா, நன்றியுரை உளவியல் துறைத் தலைவர் முனைவர் ஷீனா மேத்யூ, திரளான பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.



# 7வது முறையும் சாதனை படைப்பார் சக்கரபாணி! ஆதித்தமிழர் சமூகநீதி பேரவை ஆதரவு

திண்டுக்கல், ஏப்.2-

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தொகுதியில் திமுக சார்பில் 7வது முறையாகப் போட்டியிடும் அர. சக்கரபாணிக்கு ஆதரவு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

ஆதித்தமிழர் சமூகநீதி பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் தலித் சுப்பிரமணியன் தலைமையில் நிர்வாகிகள் குழுவினர், கள்ளிமந்தயம் பகுதியில் உள்ள சக்கரபாணி இல்லத்திற்கு நேரில் சென்று சந்தித்தனர். அருந்ததியர் மக்களின் சார்பில் தங்களது முழு ஆதரவைத் தெரிவித்ததுடன், அவருக்குப் பொன்னாடை போர்த்தி உற்சாகமாக வாழ்த்தினர். 7வது முறையாகவும் வெற்றி பெற்று மக்களுக்குத் தொடர்ந்து சேவை செய்ய வேண்டும் என நிர்வாகிகள் விருப்பம் தெரிவித்தனர்.

இந்த நிகழ்வில் ஆதித்தமிழர் சமூகநீதி பேரவை நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

# "அகரத்தம்மன் அருளோடு பிரசாரத்தைத் தொடங்கிய அமைச்சர்!" : ஆத்தூரில் ஐ.பியின் 9வது தேர்தல் களம் ஆரம்பம்





சின்னாளபட்டி, ஏப்.2-

ஆத்தூர் தொகுதியில் அமைச்சர் ஐ.பெரியசாமி சீவல்சரகு அகரத்தம்மன் பிள்ளையார்நத்தம் மகாமுத்துமாரியம்மன் கோவிலில் வழிபாடு செய்த பின்பு தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கினார். அப்போது திமுக தொண்டார்கள் 1 லட்சத்து 75 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் அமைச்சர் ஐ.பெரியசாமி மாபெரும் வெற்றி பெறுவார் என வாழ்த்தினார்கள்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தேர்தல் தொகுதியில் அமைச்சர் ஐ.பெரியசாமி ஒவ்வொரு முறையும், தங்களது தேர்தல் பிரச்சாரத்தை சீவல்சரகு அகரத்தம்மன் கோயிலில் வழிபாடு செய்த பின்புதான் தொடங்குவார். இம்முறை 9 வது தடவையாக போட்டியிடும் அமைச்சர் ஐ.பெரியசாமி சீவல்சரகு அகரத்தம்மன் கோவிலில் வழிபாடு செய்த பின்பு அருகிலுள்ள கருப்பணசாமி கோவிலுக்கு சென்று வழிபாடு செய்தார். அப்போது கோவிலுக்கு வந்த திமுவினர் நூற்றுக் கணக்கானோர் அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு சால்வை மற்றும் மாலை அணிவித்து தமிழக சட்டமன்ற வரலாற்றில் வரலாற்று சாதனை படைக்கும் அளவிற்கு மாபெரும் வெற்றி பெறுவீர்கள் என வாழ்த்தியதோடு, கடந்த முறையை விட 50 ஆயிரம் வாக்குகள் கூடுதலாக பெற்று 1 லட்சத்து 75 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் மாபெறும் வெற்றி பெறுவீர்கள் என வாழ்த்தினார்கள்.

அதன் பின்னர் நிர்வாகிகள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2 வது முறையாக முதல்வராக பொறுப்பேற்ற எண்ணற்ற நலத்திட்டங்களை ஆத்தூர் தொகுதிக்கு வழங்குவார் என்றதோடு, கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் பம்பரம் போல் சுழன்று தேர்தல் பணியாற்ற வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் பிரச்சாரத்தின்போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்ட துணை செயலாளர் மார்கிரேட் மேரி, பொருளாளர் சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் நடராஜன், ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், ராஜேந்திரன், முருகேசன், முன்னாள் ஒன்றிய செயலாளர் பி.சி.முரளிதரன், விடுதலை சிறுத்தைகள் கட்சி தண்டபாணி, மாவட்ட இளைஞரணி துமை அமைப்பாளர் மணலூர் மணிகண்டன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், விவசாய அணி அமைப்பாளர் கண்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் அக்பர், டென்னி, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பாப்பாத்தி, மாவட்ட பிரதிநிதி எல்லை ராமகிருஷ்ணன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கருப்பையா, ராஜேஸ்வரி தங்கவேல், நாகலெட்சமி சசிகுமார், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் செல்வி காங்கேயன், காணிக்கைசாமி, சுமதி கணேசன், மற்றும் திமுக மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், இளைஞரணியினர், மகளிர் அணியினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சாய்தள வசதி ஏற்படுத்த நடவடிக்கை: தமிழக தேர்தல் ஆணையம் விளக்கம்



சென்னை, ஏப்.2-

தமிழகத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும், மாற்றுத் திறனாளிகள் வாக்களிக்க, சாய்தள வசதிகள் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக, தேர்தல் ஆணையம் சென்னை உயர் நீதிமன்றத்தில் விளக்கம் அளித்துள்ளது.

மாற்றுத் திறனாளிகள் எளிதில் அணுகும் வகையில் வாக்குச் சாவடிகளில் உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கக் கோரி, மாற்றுத் திறனாளியான வைஷ்ணவி ஜெயகுமார் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்த போது, தேர்தல் ஆணையம் தரப்பில், மாற்றுத் திறனாளிகள் சட்ட விதிகளை அமல்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி, அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுறுத்தல்கள் அனுப்பப்பட்டுள்ளன. அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சாய்தள வசதிகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக, முழுமையான விவரங்களுடன் மனுவாக தாக்கல் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டது.

மேலும் மனுதாரர் தரப்பில், வாக்குச்சாவடிகளில் நிரந்தர சாய்தள வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

அதனை பதிவு செய்துகொண்ட நீதிபதிகள், மாற்றுத் திறனாளிகள், வாக்குச்சாவடிகளை எளிதில் அணுகும் வகையில் அமைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்களை மனுவாக தாக்கல் செய்ய தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டு விசாரணையை அடுத்த வாரத்துக்கு தள்ளிவைத்து உத்தரவிட்டனர்.

# வெற்றி இலக்கை நோக்கி திமுக!" - அலங்காநல்லூரில் மநீம, விசிக, எஸ்டிபிஜ நிர்வாகிகளுடன் தேர்தல் பணிமனை தொடக்கம்



அலங்காநல்லூர் ஏப்.2-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் முனியாண்டி கோவில் அருகே, திமுக தேர்தல் பணிமனை அமைப்பதற்கான முகூர்த்தக்கால் நடும் விழா சிறப்பாக நடைபெற்றது.

சோழவந்தான் தொகுதி திமுக வேட்பாளர் வெங்கடேசன் பங்கேற்று, தேர்தல் பணிமனைக்கான சிறப்புப் பூஜையைத் தொடங்கி வைத்தார். நிர்வாகிகள் மற்றும் மகளிரணி சார்பில் வேட்பாளருக்குக் கைத்தறி ஆடை அணிவித்து வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் திமுக மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர். *திமுக ஒன்றிய நிர்வாகிகள்:* தன்ராஜ் பரந்தாமன், முத்தையன், அருண்குமார் (ஒன்றியச் செயலாளர்கள்), கார்த்திகேயன் (துணைச் செயலாளர்), சுந்தர் (பொருளாளர்). *நகர - உள்ளாட்சி பிரதிநிதிகள்:* ரகுபதி (நகரச் செயலாளர்), ரேணுகாஈஸ்வரி கோவிந்தராஜ் (பேரூராட்சி தலைவர்), சுவாமிநாதன் (துணைத் தலைவர்), அழகு உமாதேவி பெரியசாமி (முன்னாள் தலைவர்), ராம்குமார் (முன்னாள் யூனியன் சேர்மன்). *முன்னாள் ஊராட்சித் தலைவர்கள்:* தனுஷ்கோடி, சேதுசீனிவாசன், செந்தில்குமார், தண்டலை சரவணன், மதிவாணன், சிதம்பரம். *அணி அமைப்பாளர்கள்:* சந்தனகருப்பு, தனிச்சியம்மருது, சுபாஷ் மதுரைவீரன் (இளைஞரணி), ஆனந்த் (துணை அமைப்பாளர்), சதீஷ் ஜெயராமன், ராஜாஜி (ஐடி விங்).*ஒப்பந்ததாரர்கள் - நிர்வாகிகள்:* கண்ணன், பரந்தாமன், அன்பழகன், கலையரசன், மஞ்சுளாகணேசன் (கவுன்சிலர்கள்), சின்னஊர்சேரி தியாகு, குமரேசன், ராஜபிரபு, அசோக், வேல்முருகன், எம்.எம்.எஸ் சரவணன், கல்லணை பாண்டி, வீரணன், ராஜேஷ். *கூட்டணிக் கட்சிகள்:* மெடிக்கல் ரமேஷ், விமல்ராஜ், ரவி (மக்கள் நீதி மய்யம்), பாலமுருகன் (விடுதலை சிறுத்தைகள்), அப்துல் ரகுமான் (எஸ்டிபிஜ தொகுதித் தலைவர்) உட்பட பலர்.

# அரியலூரில் அமைச்சர் சிவசங்கர் காரில் தேர்தல் பறக்கும் படையினர் சோதனை

அரியலூர், ஏப்.2-

அரியலூரில் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் சென்ற காரை வழி மறித்த தேர்தல் பறக்கும் படையினர் சோதனை மேற்கொண்டனர்.

அரியலூர் மாவட்டத்தில் 2026 சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் ஆணையத்தின் சார்பில் அரியலூர் மற்றும் ஜெயங்கொண்டம் என இரு தொகுதிகளுக்கு தலா 9 கண்காணிப்பு குழுக்களும், 9 பறக்கும் படையும் அமைக்கப்பட்டு 24 மணி நேரமும் 3 வேளையும் வாக்காளர்களுக்கு ஏதேனும் பணம் பட்டுவாடா செய்ய சட்ட விரோதமாக பணம் கொண்டு செல்லப்படுகிறதா, தேர்தல் விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா என்பது குறித்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் அரியலூரில் இருந்து திருமானூர் செல்லும் சாலையில் அமைச்சர் எஸ்.எஸ் சிவசங்கர் இன்று தனது காரில் சென்றார். அப்போது, கீழப்பழுவூர் பகுதியில் சோதனையில் ஈடுபட்டிருந்த தேர்தல் பறக்கும் படை அலுவலர் நிர்மல்ராஜ் தலைமையிலான குழுவினர், அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் காரை மறித்து சோதனையில் ஈடுபட்டனர்.

பறக்கும் படையினரின் சோதனைக்கு அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் முழு ஒத்துழைப்பு கொடுத்தார். மேலும், சோதனையில் பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் எதுவும் இல்லாததால், அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கார் செல்ல தேர்தல் பறக்கும் படையினர் அனுமதித்தனர். இதையடுத்து அமைச்சர் அங்கிருந்து சிவசங்கர் புறப்பட்டுச் சென்றார்.

# பரந்தூர் விமான நிலையத் திட்ட நிலங்களில் சாகுபடி நெல் கொள்முதலில் சிக்கல்

## விவசாயிகள் வேதனை



காஞ்சிபுரம், ஏப்.2-

பரந்தூர் புதிய விமான நிலையத் திட்டத்துக்காக நிலம் வழங்கிய விவசாயிகள், தற்போது விளைவித்துள்ள நெல்லை அரசு கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்ய முடியாமல் தவித்து வருகின்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூர் விமான நிலையத் திட்டத்துக்காகப் பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் தங்கள் நிலங்களை அரசுக்கு வழங்கி உள்ளனர்.

இதற்கான இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக் கொண்ட நிலையில், அந்த நிலங்கள் வருவாய்த் துறையினரால் அரசு நிலங்களாக மாற்றப்பட்டுள்ளன. இருப்பினும், திட்டப் பணிகள் முழுமையாகத் தொடங்காத நிலையில், அந்த நிலங்களில் விவசாயிகள் தொடர்ந்து நெல் சாகுபடி செய்துள்ளனர்.

தற்போது அறுவடை முடிந்து, விளைவித்த நெல்லை அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு விவசாயிகள் கொண்டு செல்கின்றனர். அங்கு நெல்லை விற்பனை செய்ய 'அடங்கல்' சான்றிதழ் கட்டாயம் எனக் கேட்கப்படுகிறது.

நிலங்கள் அரசு பெயருக்கு மாற்றப்பட்டு விட்டதால், கிராம நிர்வாக அலுவலர்களிடம் அடங்கல் சான்றிதழ் பெறுவதில் பெரும் சிக்கல் நீடிக்கிறது. அரசு கொள்முதல் நிலையங்களில் விற்க முடியாததால், வேறு வழியின்றி தனியார் வியாபாரிகளிடம் மிகக் குறைந்த விலைக்கு நெல்லை விற்க வேண்டிய கட்டாயத்துக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

இது தங்களுக்குப் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்துவதாக அவர்கள் வேதனை தெரிவிக்கின்றனர். எனவே, பரந்தூர் விமான நிலையத் திட்டப் பகுதி விவசாயிகள் தங்களது நெல்லை எவ்விதத் தடையுமின்றி அரசு கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்ய, மாவட்ட நிர்வாகம் சிறப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளார் கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் நடைபெறும் முறைகேடுகளைத் தடுக்கக் கோரி, தமிழ்நாடு அனைத்து விவசாய சங்கங்களின் கூட்டியக்கம் சார்பில் அதன் மாநிலத் தலைவர் கே.எழிலன் தலைமையில் நேற்று ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது.

அதில், நெல் மூட்டைகளைப் பெறுவதற்கு பணம் கேட்பது, இடைத்தரகர்கள் மூலம் முறையற்ற வசூல் நடப்பதாக புகார் தெரிவிக்கப்பட்டது. நெல் கொள்முதல் நிலையங்களை உழவர் உற்பத்தியாளர் குழுக்களிடம் ஒப்படைக்க கோரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது



■ திருநெல்வேலி மாவட்டம் கால்வாய் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பூர்ண ஸ்ரீ புஷ்காலம்பிகா சமேத ஸ்ரீ ஐயப்ப நயினார் சாஸ்தா திருக்கோவிலில், முக்கிய விழாவான வர்ஷாபிஷேகம் மற்றும் பங்குனி உத்திர திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இத்திருவிழாவில் பக்தர்கள் பொங்கலிட்டு அபிஷேக அலங்காரம் மற்றும் தீபாராதனையுடன், அன்னதானமும் மிகச் சிறப்பாக நடைப்பெற்றது. பின்னர், ஸ்ரீ ஐயப்பஷ நயினார் சாஸ்தா அருள் பெற்றனர்.

# புனித வெள்ளி தினத்தில் மதுக்கடைகளை மூட வேண்டும்: ஜி.கே.வாசன் வலியுறுத்தல்



சென்னை, ஏப்.2-

கிறிஸ்தவர்களின் முக்கிய பண்டிகளை ஒன்றான புனித வெள்ளி தினமான வரும் ஏப்.3 ம் தேதியன்று, மதுக்கடைகளை மூட உத்தரவிட வேண்டும் என தமிழக, அரசுக்கு தமாகா தலைவர் ஜி.கே.வாசன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: உலக மக்களை பாவத்திலிருந்து மீட்பதற்காக இயேசு கிறிஸ்து தன் உயிரை தியாகம் செய்து கொடுத்த நாள் புனித வெள்ளியாக அனுசரிக்கப்படுகிறது.

கிறிஸ்துவ மக்களின் புனித நாட்களில் ஒன்றாக கருதப்படும் புனித வெள்ளியை முன்னிட்டு, பெரும்பாலான கிறிஸ்தவர்கள் விரதம் இருப்பதும், தேவாலயங்களுக்கு சென்று வழிபடுவதும் வழக்கம்.

பொதுமக்களுக்கு இடையூறு கிறிஸ்தவர்கள், அவர்களது புனித தினமான புனித வெள்ளியை அனுசரிக்கும் வேளையில் மதுக்கடைகளை திறந்திருப்பது அவர்களுக்கும், பொதுமக்களுக்கும் இடையூறாக இருக்கும்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு இருக்கும் சூழலில், மதுக்கடைகளை அதிகப்படுத்தி மதுவை தாராளமயமாக்கி, குற்றங்கள் அதிகரிக்கச் செய்திருப்பது திமுக ஆட்சியின் வேதனையான சாதனையாக இருக்கிறது.

குறிப்பாக, பள்ளி, கல்லூரி முதல் கோயில், தேவாலயம் வரை செல்லும் வழியெல்லாம் மதுக்கடைகள் இருப்பது கொடுமையானது.

எனவே, புனித வெள்ளியன்று மதுக்கடைகளை மூட வேண்டும் என கிறிஸ்தவர்கள் வைத்த கோரிக்கையின் படி, ஏப்.3 ம் தேதி புனித வெள்ளி அன்று, தமிழகம் முழுவதும் உள்ள மதுக்கடைகளை மூடுவதற்கான அறிவிப்பை தமிழக அரசு உடனடியாக வெளியிட வேண்டும். இவ்வாறு ஜி.கே.வாசன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் விதிமுறை மீறல்: தர்மபுரி நாதக வேட்பாளர் மீது வழக்குப்பதிவு

தர்மபுரி, ஏப்.2-

தர்மபுரி தொகுதியில் நாம் தமிழர் கட்சி வேட்பாளராக சாந்தலட்சுமி போட்டியிடுகிறார். பிரசாரத்தை துவங்குவதற்கு முன்பாக நேற்று முன்தினம் அதியமான்கோட்டையில் உள்ள அதியமான் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த தர்மபுரி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் அனுமதி கேட்டுள்ளார். அதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், சாந்தலட்சுமி, அதியமான் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தியுள்ளார்.தேர்தல் செய்திகள்

இதுதொடர்பாக அதியமான்கோட்டை கிராம நிர்வாகி அதிகாரி மாது, சுற்றுலா பகுதியில் தேர்தல் நன்னடத்தை விதிமுறை மீறி செயல்பட்டதாக நாதக வேட்பாளர் மீது அதியமான் கோட்டை காவல் நிலையத்தில் புகார் செய்தார். அதன்பேரில் தேர்தல் நடத்தை விதியை மீறியது தொடர்பாக போலீசார் 2 பிரிவின் கீழ் சாந்தலட்சுமி மீது வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்

# பிரேமலதா விஜயகாந்த் முதல் பிரச்சாரம்

சென்னை, ஏப்.2-

தேமுதிக வேட்பாளர்களை ஆதரித்து அக்கட்சியின் பொதுச் செயலாளர் பிரேமலதா இன்று தனது பிரச்சாரத்தை தொடங்குகிறார்.



இதுகுறித்து அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், "இன்று திருத்தணி, நாளை பல்லாவரம், நாளை மறுநாள் குடியாத்தம், 4ம் தேதி போளூர், 5ம் தேதி மைலம், 6ம் தேதி விருத்தாசலம், 10ம் தேதி தருமபுரி, 11ம் தேதி ஓமலூர், 12ம் தேதி சேலம் மேற்கு ஆகிய தொகுதிகளில் முறையே கிருஷ்ண மூர்த்தி, அனகை முருகேசன், பிரதாப், சரவணன், வெங்கடேசன், பிரேமலதா, இளங்கோவன், ஏ.ஆர் இளங்கோவன், அழகாபுரம் மோகன்ராஜ் ஆகியோரை ஆதரித்து பிரேமலதா பிரச்சாரம் செய்கிறார். 13, 14ல் மீண்டும் விருத்தாசலத்தில் பிரச்சாரம் செய்கிறார்.

15ல் சென்னை சட்டமன்றதொகுதியிலும், 16, 17ல் விருதுநகரில் விஜயபிரபாகரனை ஆதரித்தும், 18 முதல் 21ம் தேதி வரை மீண்டும் விருத்தாசலத்திலும் பிரச்சாரம் செய்கிறார்'' என கூறப்பட்டுள்ளது

# 'பீதியுடன் எரிபொருள் வாங்காதீர்' பொது மக்களுக்கு மத்திய அரசு வேண்டுகோள்

புதுடெல்லி, ஏப்.2-

இரண்டு மாதங்களுக்குப் போதுமான அளவு கச்சா எண்ணெய் கையிருப்பில் உள்ளதாகவும், எரிபொருள் பற்றாக்குறை இல்லை என்றும் தெரிவித்துள்ள மத்திய அரசு, பீதியுடன் எரிபொருள் வாங்குவதை தவிர்க்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக அமைச்சகங்களுக்கு இடையேயான கூட்டத்தில் உரையாற்றிய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் இணைச் செயலாளர் சுஜாதா சர்மா, ''நமது எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் முழு வீச்சில் இயங்கி வருகின்றன. சில்லறை விற்பனை நிலையங்களில் எந்தவிதமான தட்டுப்பாடும் ஏற்பட்டதாக தகவல் இல்லை.

சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பு பிரென்ட் கச்சா எண்ணெய் விலை ஒரு பேரல் 70 டாலராக இருந்தது. அது தற்போது 100 டாலரைக் கடந்துள்ளது. இந்த திடீர் உயர்வு இருந்தபோதிலும் உள்நாட்டு நுகர்வோருக்கான பெட்ரோல், டீசல் விலைகளில் எந்த உயர்வும் செய்யப்படவில்லை. பெட்ரோல், டீசல் விலை ஏப்ரல் 6, 2022க்குப் பிறகு உயர்த்தப்படவில்லை. மார்ச் 2024ல் ரூ.2 குறைக்கப்பட்டது. அது தற்போதும் நடைமுறையில் உள்ளது.

சர்வதேச விலை ஏற்ற இறக்கங்களில் இருந்து உள்நாட்டு நுகர்வோரைப் பாதுகாக்க விலைகளில் எந்த உயர்வும் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில் இந்திய அரசு கலால் வரியைக் குறைத்துள்ளது. இருப்பினும், நமது எண்ணெய் நிறுவனங்களுக்கு பெட்ரோல், டீசல் இரண்டிலும் குறைவான வருவாயே கிடைத்துள்ளது. உள்நாட்டு சந்தையில் விமான எரிபொருள் மற்றும் டீசல் கிடைப்பதை உறுதி செய்ய இந்திய அரசு அவற்றுக்கு ஏற்றுமதி வரியை விதித்துள்ளது.

நம்மிடம் போதுமான அளவு பெட்ரோல், டீசல் கையிருப்பில் உள்ளது என்பதை நான் உறுதிபட தெரிவிக்கிறேன். எனவே, பொதுமக்கள் பீதியுடன் எரிபொருட்களை வாங்குவதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

# "மக்களே எஜமானர்கள்.. மன்னிப்புக் கேட்டு வாக்கு சேகரித்த அதிமுக வேட்பாளர் மாணிக்கம் உருக்கமான உரை



அலங்காநல்லூர் ஏப்.2-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஒன்றியம் குமாரம் பகுதியில், சோழவந்தான் தொகுதி அதிமுக வேட்பாளர் மாணிக்கம் இரட்டை இலை சின்னத்திற்குத் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அதிமுக ஒன்றியச் செயலாளர் ரவிச்சந்திரன் (தலைமை), அலங்கை நகரச் செயலாளர் அழகுராஜ் (முன்னிலை).

*வேட்பாளர் உரை:* "கடந்த அதிமுக மற்றும் எடப்பாடியார் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டங்களைத் தொடர எனக்கு வாக்களியுங்கள். கடந்த தேர்தலில் நடந்த தவறுக்கு மக்களாகிய உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். மக்களின் பிரச்சனைகளில் முதல் ஆளாக நிற்கும் உங்கள் வீட்டுப் பிள்ளையாக என்னை வெற்றி பெறச் செய்யுங்கள்," என உருக்கமாகப் பேசினார். வாகனத்தில் சென்றும், பின்னர் வீதி வீதியாக நடைப்பயணமாகச் சென்றும் இரட்டை இலைக்கு ஆதரவு திரட்டினார்.

இந்நிகழ்வில் அதிமுக மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் திரளாகக் கலந்து கொண்டனர். *அதிமுக முக்கிய நிர்வாகிகள்:* ராஜேஷ்கண்ணா (அம்மா பேரவை மாநில துணைச் செயலாளர்), அரியூர் ராதாகிருஷ்ணன், காளிதாஸ், கொரியர் கணேசன் (ஒன்றியச் செயலாளர்கள்), சம்பத் (ஒன்றிய துணைச் செயலாளர்), சிங்கராஜ.

*அணி நிர்வாகிகள்:* சுந்தர்ராஜன் (அண்ணா தொழிற்சங்க ஒன்றியச் செயலாளர்), சுந்தரராகவன் (நகரப் பொருளாளர்), புலியம்மாள் (நகர இணைச் செயலாளர்), வெள்ளைகிருஷ்ணன், கார்த்திக் (வார்டு செயலாளர்கள்), தண்டலை ஆனந்த் (ஐடி விங்).

*கூட்டணிக் கட்சிகள்:* வக்கீல் கோடீஸ்வரன், சம்பகுளம் ரகு (அமமுக ஒன்றியச் செயலாளர்கள்), பழனிவேல்சாமி (பாஜக தேசிய பொதுக்குழு உறுப்பினர்), இருளப்பன், முனீஸ்வரி, கணேசன் (பாஜக மண்டலத் தலைவர்கள்) மற்றும் தோடனேரி முத்துப்பாண்டி உட்பட பலர் பங்கேற்றனர்.



## "தேர்தல் களத்தில் 'மாஸ்' காட்டும் அப்பாவு!" திசையன்விளையில் திமுகவில் இணைந்த முக்கியப் புள்ளிகள்

திசையன்விளை ஏப். 2-

ராதாபுரம் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் சபாநாயகர் எம். அப்பாவு முன்னிலையில், திசையன்விளையில் பல்வேறு கட்சிகளில் இருந்து விலகி ஏராளமானோர் திமுகவில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

திசையன் விளை நகர அதிமுக சிறுபான்மை நலப்பிரிவு செயலாளர் அருள்ராஜ் தமிழக வெற்றி கழகம், நாம் தமிழர் கட்சி, அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் உள்ளிட்ட பலர் மாவட்ட பஞ்சாயத்து தலைவர் வி எஸ் ஆர் ஜெகதீஷ் ஏற்பாட்டில் திருநெல்வேலி கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் கிரகாம்பெல் மற்றும் ராதாபுரம் சட்டமன்ற திமுக வேட்பாளர் அப்பாவு முன்னிலையில் தாய் கழகமான திமுகவில் தன்னை உறுப்பினராக இணைத்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில் திசையன்விளை பேரூராட்சி திமுக கவுன்சிலர்கள் எல். ஆறுமுக தேவி லிங்கராஜ் எஸ் எம் றி அலெக்ஸ் மற்றும் திமுக பிரமுகர் நெல்சன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



■ திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் பங்குனி உத்திர திருவிழாவை முன்னிட்டு அதிமுக பழனி சட்டமன்ற வேட்பாளர் ரவி மனோகரன் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது என் டி ஏ கூட்டணி கட்சிகளை சேர்ந்த பாரதிய ஜனதா கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, தமிழ் தேசிய பார்வர்டு பிளாக் கட்சி, இந்திய ஜனநாயக கட்சி,தென்னிந்திய பார்வேர்ட் பிளாக் கட்சி, அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் போன்ற அனைத்து கூட்டணி கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் அவருடன் இணைந்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். வெற்றிக்கனியை தட்டி செல்ல அனைத்து கூட்டணி கட்சி நிர்வாகிகளும் வாழ்த்துக்களை தெரிவித்தனர்



## முனியாண்டி அருளோடு களத்தில் குதித்த கருப்பையா! சோழவந்தான் தொகுதியில் தவெக வேட்பாளர்

அலங்காநல்லூர்., ஏப்.2-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் புகழ்பெற்ற ஸ்ரீ முனியாண்டி திருக்கோவிலில், சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி தமிழக வெற்றி கழக வேட்பாளர் மூ.வீ. கருப்பையா சிறப்புப் பூஜையில் கலந்து கொண்டு வழிபாடு செய்தார்.

மதுரை மாநகர் வடக்கு மாவட்ட செயலாளர் விஜய்அன்பன் கல்லானை, வழிகாட்டுதலின் பேரிலும் புறநகர் மாவட்டச் செயலாளர் விஷால்கிருஷ்ணா ஆலோசனை பேரிலும் ஒன்றிய செயலாளர் விஜய்ஹரிஷ் தலைமையில் நகர செயலாளர் தளபதி ரஞ்சித் முன்னிலையில் சோழவந்தான் தொகுதி வேட்பாளர் மூ.வீ.கருப்பையா, சிறப்பு பூஜையில் கலந்து கொண்டு வழிபட்டார்.

இதில் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் தனசேகரன், கார்த்திக்,மேற்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, பாலமேடு பேரூர் செயலாளர் புகழ், நிர்வாகிகள் ராமநாதன், முத்து,வெங்கடேஷ், ராஜாமணி,முருகேசன், சரத், மற்றும் மகளிரணி உட்பட கிளை நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.



## சின்னமனூர் செல்வ விநாயகர் கோவில் விழாவில் பங்கேற்று சிறப்பித்த அதிமுக மாவட்டச் செயலாளர்

தேனி ஏப்.2-

தேனி மாவட்டம் சின்னமனூர், முல்லைவனம் ஆர்.பி. நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில் வருஷாபிஷேக விழா வெகுவிமர்சையாக நடைபெற்றது. தலைமை (திருக்கோயில் திருப்பணிதாரர்கள்): எஸ். பால்வண்ணன், பி. ஈஸ்வரி, எஸ்.பி. பாரத், எஸ்.பி. வர்ஷா.சிறப்பு அழைப்பாளர்: தேனி மேற்கு மாவட்டச் செயலாளரும், கம்பம் சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளருமான எஸ்.டி.கே. ஜக்கையன். திருக்கோயில் திருப்பணிதாரர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்ற திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள் சுவாமி தரிசனம் செய்தார். அதனைத் தொடர்ந்து, பக்தர்களுக்கு வழங்கப்பட்ட அன்னதானத்தை அவர் முறைப்படி தொடங்கி வைத்தார். இதில் அப்பகுதி பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.



## "சுற்றுலாப் பயணிகளை ஈர்த்த ஆன்மீகத் திருவிழா!" கொடைக்கானல் குறிஞ்சி ஆண்டவர் கோவிலில் சிறப்பு பூஜைகள்

கொடைக்கானல் ஏப்.2-

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில், இந்து முன்னணி சார்பில் ஆண்டுதோறும் நடைபெறும் பங்குனி உத்திரக் காவடித் திருவிழா இந்த ஆண்டும் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

சுமார் 1300க்கும் மேற்பட்ட ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் முருகப் பெருமானுக்குக் காவடிகள் எடுத்துத் தங்களது நேர்த்திக்கடனைச் செலுத்தினர். ஏரிச்சாலையில் ஒன்றிணைந்த பக்தர்கள், ஏழு ரோடு, பேருந்து நிலையம், அண்ணா சாலை, மூஞ்சிக்கல் மற்றும் எம்.எம். தெரு வழியாக ஊர்வலமாகச் சென்று அருள்மிகு குறிஞ்சி ஆண்டவர் திருக்கோவிலை அடைந்தனர்.

பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் அனைவருக்கும் சிறப்பான அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கொடைக்கானல் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதி பொதுமக்கள், பக்தர்கள் மற்றும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் கலந்து கொண்டு முருகப் பெருமானின் அருளைப் பெற்றனர். இந்து முன்னணி நிர்வாகிகள் விழா ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.




## "திருப்பூரில் 100% வாக்குப்பதிவு உறுதி!" - வாலிபாளையம் பகுதியில் பாரதியார் குருகுலம் அறக்கட்டளையின் விழிப்புணர்வு

திருப்பூர்., ஏப்.2-

திருப்பூர் மாநகரம் 35 வது வார்டு, வாலிபாளையம் பகுதியில் பாரதியார் குருகுலம் அறக்கட்டளை சார்பில் '100% வாக்களிப்போம்' என்ற வாக்காளர் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.கிருஷ்ணன் அவர்கள் முகாமைத் தலைமை தாங்கி நடத்தினார். சசிகுமார் (மாவட்ட துணைத் தலைவர்), ஜெகதீஷ் (நகரத் துணைத் தலைவர்), சந்தோஷ் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்பதையும், 100 சதவீத வாக்குப்பதிவின் அவசியத்தையும் பொதுமக்களுக்கு வலியுறுத்தும் வகையில் இந்த முகாம் சிறப்பாக அமைந்தது.



■ தென்காசி மாவட்டம் கொடிக்குறிச்சி ஸ்ரீராம் நல்லமணி யாதவா கல்லூரி வாக்கு எண்ணிக்கை மையத்தில் நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்2026ஐ முன்னிட்டு 5 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை மையத்திற்கு செல்லும் வழித்தடங்கள் மற்றும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்வது குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், கள ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அ.மயில்வாகனன் மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன் ஆகியோர் உள்ளனர்.



## மதுரை வடக்கு தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் நிர்வாக குழு கூட்டம்

மதுரை, ஏப்.2-

மதுரை வடக்கு தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் நிர்வாக குழு கூட்டம் மதுரை கோ.புதூர் அல்அமீன் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. வடக்கு கிளைத் தலைவர் முனைவர்.கண்ணன் தலைமை தாங்கினார். பள்ளித் தலைமையாசிரியர் ஷேக் நபி வாழ்த்துரை வழங்கினார். மாணவர்களுக்கு அறிவியல் மனப்பான்மையை வளர்ப்பதற்காக "துளிர் இல்லம்" என்ற அமைப்பை அழகர் நகரில் துவங்குவது என முடிவெடுக்கப்பட்டது. கிளைச் செயலாளர் சேகர் துளிர் இல்லத்தின் செயல்பாடுகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

இந்நிகழ்விற்கு துணைத் தலைவர் கற்பகவள்ளி, இணைச் செயலாளர் ஜாகீர் நிஷா, முன்னாள் வடக்கு கிளைத் தலைவர் ராமசுந்தரம், உறுப்பினர் செந்தில் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். கற்பகவள்ளி நன்றி கூறினார்.

## விஜய் மீது நடவடிக்கை எடுக்க இந்திய கம்யூ. வலியுறுத்தல்

சென்னை, ஏப்.2-

தவெக தலைவர் விஜய், தனது கட்சி நிர்வாகிகள் கூட்டத்தில் பேசும் போது, "தேர்தல் நேரத்தில் ரூ.1000, 2 ஆயிரம், 5 ஆயிரம் கொடுத்தால் பணத்தை வாங்கிக் கொண்டு, அவர்கள் காதில் விசிலை ஊதி அனுப்புங்கள்." என்று பேசியிருப்பது தேர்தல் மாதிரி நடத்தை விதிமுறைகள் அனைத்தையும் அப்பட்டமாக மீறிய செயலாகும்.விதிமுறைகளை மீறியுள்ள விஜய் மீது, தேர்தல் ஆணையம் தானே முன் வந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.
















SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000